செ.வெ.எண்.58 நாள்: 21.08.2019

**தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம் இருவப்பபுரம் பகுதி 2 கிராம பகுதியில் நடைபெற்ற மனுநீதிநாள் முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் மு.வீரப்பன் அவர்கள் 42 பயனாளிகளுக்கு ரூ.70,240/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம் இருவப்பபுரம் பகுதி 2 கிராமத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் மு.வீரப்பன் அவர்கள் தலைமையில் மனுநீதிநாள் முகாம் இன்று (21.08.2019) நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் 42 பயனாளிகளுக்கு ரூ.70,240/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். இக்கூட்டத்தில் திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.சண்முகநாதன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பேசியதாவது:

தமிழக அரசு அலுவலர்கள் மக்களை தேடி சென்று மனுக்களை பெற்று குறைகளை நிவர்த்தி செய்திட மனுநீதி நாள் முகாம்கள் கிராம பகுதியில் நடத்த உத்தரவிட்டு நடத்தப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் பொதுமக்களின் குறைகளை களைந்திட ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் அனைத்து கிராம பகுதிகளிலும் சிறப்பு குறைதீர்க்கும் நாள் முகாம்களை துணை வட்டாட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள் மூலம் நடத்தி தகுதியுள்ள அனைவருக்கும் உடனடியாக தீர்வு வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள கிராமங்களிலும் குறைதீர் முகாம் நடத்தப்படுகிறது. கிராம மக்கள் அரசின் திட்டங்களை பற்றி முழுமையாக தெரியாத நிலை உள்ளது. எனவே, அனைத்து கிராம பகுதிகளிலும் அரசின் அனைத்து துறை திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். படித்த பெண்களுக்கு தாலிக்கு தங்கத்துடன் உதவித்தொகை வழங்கும் திட்டம், மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணிணி வழங்கும் திட்டம், மகப்பேறு நிதியுதவி வழங்கும் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டடங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வெண்டும்.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மழைநீர் சேமிக்கும் திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றிட பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நமது மாவட்டத்தில் குடிமராமத்து திட்டத்தின்கீழ் பெரிய ஏரிகள், கண்மாய்கள் தூர்வாரும் பணிகளும், ஜல்சக்தி அபியான் மற்றும் ஊருக்கு நூறு கை திட்டத்தில் சிறுகுளம், குட்டைகள், ஊரணிகள் தூர்வாரும் பணிகளும் நடைபெற்று வருகிறது. மேலும், அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேமிப்பு அமைப்புகளை ஏற்படுத்திட வேண்டும். இதுகுறித்து அனைத்து தரப்பினரிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். குறைதீர் கூட்டத்தை முன்னிட்டு ஏற்கனவே 55 மனுக்கள் பெறப்பட்டு 29 மனுக்கள்மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் வருவாய் துறை மூலம் பட்டா மாறுதல் உத்தரவு 20 பயனாளிகளுக்கும், இலவச வீட்டுமனைப்பட்டா 7 நபர்களுக்கு மொத்தம் ரூ.70,000/- மற்றும் சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 6 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை உத்தரவினையும், வேளாண்மை துறை மூலம் 2 விவசாயிகளுக்கு ரூ.240/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் அரசின் திட்டங்கள் பற்றி முழுமையாக தெரிந்துகொண்டு தங்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் தெரிவித்து அவர்களும் பயன்பெற விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரநாராயணன், திருச்செந்தூர் கோட்டாட்சியர் (பொ) / தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) திரு.விஜயகுமார், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.அமுதா, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.பாலசுப்பிரமணியன், ஏரல் வட்டாட்சியர் திருமதி.அற்புதமணி, திருவைகுண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நாகராஜன், திரு.சுப்பிரமணியன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.